# 13. கிராம ஊராட்சியின் படிவங்களும், பதிவேடுகளும்

**(MAINTENANCE OF VILLAGE PANCHAYAT FORMS AND REGISTERS)**

(அரசு ஆணை எண். 92 ஊ.வ.து. நாள் 26.3.1997)

**பதிவேடுகள் பராமரித்தல் :-**

ஊராட்சி நிர்வாகம் மற்றும் மூலதன/பராமரிப்பு பணிகள் தொடர்பான பட்டியல்கள்/வங்கி கைச்சாத்துகள் ரொக்கப் பதிவேடுகள். ஏனைய பதிவேடுகள், பதிவுருக்கள் அனைத்தும் கிராம ஊராட்சி அலுவலகத்தில் பாதுகாப்பாக வைத்திருக்க வேண்டும்.

| பட்டியல் எண் | பதிவேடுகள் |
|---|---|
| எண்.1 | வீட்டு வரி கேட்பு தொகைக்கான அறிவிப்பு : வீட்டு உரிமையாளர்களின் பெயர் விவரம், வீட்டின் வகைப்பாடு, செலுத்த வேண்டிய வீட்டு வரி ஆகியவற்றின் விவரத்துடன் வீட்டு உரிமையாளருக்கு அனுப்பப்பட வேண்டிய அறிவிப்பாகும். |
| எண்-2 | வீட்டு வரி ரசீதுகள் : வீட்டு வரி செலுத்துபவருக்கு அளிக்கப்படும் ரசீதாகும் |
| எண்-3 | வீட்டு வரி (நிலுவைத் தொகை, நடப்பு வரித் தொகை) கேட்புத் தொகைப் பதிவேடு : இப்பதிவேடு 5 ஆண்டுகளுக்கு நடைமுறையில் இருக்கும். புதியதாக வீட்டுவரி செலுத்த வேண்டியிருப்பின் அதிலேயே சேர்த்துக் கொள்ளலாம்/நீக்கம் செய்யலாம். இப்பதிவேட்டின் முதல் பக்கத்தில் வீட்டு வரி நிர்ணயம் செய்யப்பட்ட தீர்மானத்தை இணைக்க வேண்டும். வரிவிகிதம் நிர்ணய தீர்மானத்தையும் இணைக்க வேண்டும் |
| எண்-4 | தொழில் வரி ரசீது : தொழில் வரி செலுத்துபவருக்கு அளிக்கப்படும் இரசீதாகும். |
| எண்-5 | தொழில் வரி (நிலுவைத் தொகை, நடப்பு கேட்புத் தொகை) கேட்புத் தொகைப் பதிவேடு : தொழில் வரி செலுத்த வேண்டியவரின் பெயர் மற்றும் விவரங்கள் பதியப்படவேண்டும் |
| எண்-6 | பல்வகை வரவு ரசீது : பல வகையான கட்டணங்கள் ஊராட்சியில் பெறப்படுவதற்கு அத்தாட்சியாக அளிக்கப்படும் இரசீதாகும் |
| எண்-7 | ஊராட்சி வரிகள் மற்றும் பல்வகை இனங்களில் வசூல் பதிவேடு : வீட்டு வரி, தொழில் வரி மற்றும் விளம்பர வரி, இதர ஊராட்சி நிர்ணயிக்கும் கட்டணங்கள் ஆகியவற்றை வசூல் செய்த விவரங்களைத் தொகுத்து எழுதும் பதிவேடாகும். |
| எண்-8 | ஊராட்சிக்கு வரப்பெறும் மானியங்கள் மற்றும் ஒதுக்கீடு விவரப் பதிவேடு : மாநில நிதி மான்யம் மற்றும் ஒதுக்கீட்டு வரவினங்கள் ஆகிய வரவுகளைக் குறிக்கும் பதிவேடாகும். |
| எண்-9 | கிராம ஊராட்சி நிதி சிட்டா : தினந்தோறும் பெறப்படும் வரவினங்கள் பதியப்படவேண்டும் (7 மற்றும் 8-ல் வரவுகள்) |
| எண்-10 | ஊராட்சிகளின் பல்வகை கேட்பு, வசூல் நிலுவைப் பதிவேடு : (1) மீன்பாசி (2) கட்டட குத்தகை (3) மச்ச மகசூல் ஆயத்தொகை (4) சந்தை குத்தகை (5) பேருந்துநிலைய குத்தகை வசூல் ஆகிய வரியினங்கள் மற்றும் குத்தகைக் கட்டணங்கள், இதர கட்டணங்கள் ஆகியவற்றின் கேட்பு, வசூல் மற்றும் நிலுவைகள் பதியப்பட வேண்டும். |
| எண்-11 | ரொக்கப் புத்தகம் : (1வது கணக்கு (பொது நிதி)) ஒவ்வொரு நிதிக் கணக்கிற்கும் தனித்தனியே ரொக்கப் புத்தகம் பதிவு செய்யப்படவேண்டும். |
| எண்-12 | ஊராட்சி முன்பணங்கள் பதிவேடு: முன்பணம் அளித்தால் இந்தப் பதிவேட்டில் பதியப்பட்ட பின்னரே முன்பணம் வழங்கப்பட வேண்டும் |
| எண்-13 | தலைப்பு வாரியான செலவு பதிவேடு அல்லது ஒப்புதல் அளிக்கப்பட்ட பட்டியல் பதிவேடு : பட்டியல் அனுமதிக்கப்பட்ட பின்னர் ரொக்கமாகவோ அல்லது காசோலை மூலமாகவோ வழங்கப்படும் அனைத்து இனங்களும் பதியப்படவேண்டும். |
| எண்-14 | தொகை ஏற்பளிப்பு பதிவேடு: கொடுக்கப்படும் பணத்திற்கு ஒப்புதல் பெறப்பட வேண்டிய பதிவேடாகும் |

| பட்டியல் எண் | பதிவேடுகள் |
|---|---|
| எண்-15 | மதிப்பீடுகள் மற்றும் ஒதுக்கீடு பற்றிய பதிவேடு (கிராம ஊராட்சி நிதிக் கணக்கு) : ஊராட்சி நிதி மூலம் எடுக்கப்படும் பணிகளுக்கு மதிப்பீடு மற்றும் வரவு செலவு அறிக்கையில் ஒதுக்கப்பட்ட ஒதுக்கீட்டு தொகை ஆகியவை பதிவு செய்யப்பட வேண்டும் |
| எண்-16 | கிராம ஊராட்சியின் சொத்துக்கள் மற்றும் தளவாடங்கள் பற்றிய பேரேடு: ஊராட்சி நிதி மூலம ஏற்படுத்தப்படும் அனைத்து சொத்துக்களின் விவரங்கள் மற்றும் ஊராட்சிகளின் சொத்துக்கள் இனவாரியாக பதிவு செய்யப்படவேண்டும். |
| எண்-17 | கைபம்பு, விசை பம்பு, தெரு விளக்கு,**முர்வு** பராமரிப்பு, சாலை பராமரிப்பு பதிவேடு : ஊராட்சி சொத்துக்கள் பராமரிப்பு செலவுகள் ஆகியவை பதிவு செய்யப்படவேண்டும் |
| எண்-18 | தெரு விளக்குப் பொருள்கள், கைப்பம்புகளின் உதிரிபாகங்கள், பொதுச் சுகாதாரம் தொடா்பான பொருள்கள் மற்றும் ஏனைய பயணீட்டுப் பொருட்கள் இருப்புப் பதிவேடு: ஊராட்சியினால் வாங்கப்படும் அனைத்து பொருட்கள் விவரங்களின் இருப்பு பதிவு செய்யப்படவேண்டும். |
| எண்-19 | செலவுச் சீட்டு படிவம் : பட்டியல்கள் தயாா் செய்யும் படிவம் |
| எண்-20 | பண மதிப்புப் (படிவங்கள் குறித்து இருப்பு) பதிவேடு : (1) வீட்டு வரி இரசீது புத்தகம் (2) தொழில் வரி இரசீது புத்தகம், விளம்பர வரி இரசீது புத்தகம் (3) பல்வகை இரசீது புத்தகங்கள் (4) அளவு புத்தகங்கள் (5) ஒப்பந்தப் படிவங்கள் (6) வைப்புத்தொகை பத்திரங்கள் (7) எழுது பொருட்கள் இருப்பு புத்தகம் (8) ஊராட்சிக்கு வரப்பெற்ற காசோலைகள்/வங்கி வரைவுகள் ஆகியவை இருப்பு - வழங்கல் விவரம் குறிப்பிட வேண்டும். |
| எண்-21 | கழிவு செய்யப்பட்ட பொருட்களின் இருப்புப் பதிவேடு : பழுதடைந்த மற்றும் உபயோகமற்ற பொருட்களின் இருப்புகள் பதிவு செய்யப்பட வேண்டும். |
| எண்-22 | ஊராட்சியின் சிமெண்ட், உருக்கு, தாா், கதவுகள், சன்னல்கள், மற்றும் கட்டுமானப் பணிகளுக்குப் பயன்படும் ஏனைய பொருட்கள் குறித்த இருப்பு பதிவேடு : ஊராட்சியின் மூலம் பெற்பட்ட சிமெண்ட், இரும்புக் கதவுகள், சன்னல்கள், தாா் மற்றும் இதர பொருட்களின் இருப்புகள் பதிவு செய்யப்பட வேண்டும் |
| எண்-23 | ரொக்கப் புத்தகம் - (2வது கணக்கு) : ஊராட்சியின் மின் கட்டணம் மற்றும் குடிநீா் கட்டணம் குறித்த வரவு செலவு விவரங்கள் இப்பதிவேட்டில் பதிவு செய்யப்பட வேண்டும். |
| எண்-24 | தலைப்பு வாரியான வரவு-செலவு பதிவேடு (2வது கணக்கு) : ஊராட்சியின் மின் கட்டணம் மற்றும் குடிநீா் கட்டணம் பற்றிய செலவு விவரங்கள் பதிவு செய்யப்பட வேண்டும் |
| எண்-25 | மதிப்பீடுகள் மற்றும் ஒதுக்கீடுகள் பற்றிய பதிவேடு (2வது கணக்கு) : தற்போது 2வது கணக்கில் வேலைகள் ஏதும் எடுத்துச் செய்யும் அவசியம் இல்லை. எனவே, இப்போது இப்பதிவேட்டில் பதிவு செய்யும் அவசியம் எழவில்லை. |
| எண்-26 | ரொக்க பதிவேடு புத்தகம் (திட்ட நிதிக் கணக்கு) : கிராம ஊராட்சி திட்ட நிதி கணக்கிற்கு வரவு (ம) பணிகள் செய்த செலவு குறித்த விபரம் இப்பதிவேட்டில் பதியப்படும் |
| எண்-27 | தொகை வரவுகள் மற்றும் செலவுகள் பதிவேடு (திட்ட நிதிக் கணக்கு) : இந்திரா குடியிருப்புத் திட்டம் உள்ளிட்ட இதர திட்டங்களின் கீழ் செலவிடப்படும் செலவு விவரம் இதில் தலைப்பு வாரியாகப் பதியப்படும். |
| எண்-28 | திட்டப்பணிகள் பதிவேடு : கிராம ஊராட்சியின் திட்டநிதியில் செய்யப்படும் பணிகள் குறித்து இதில் பதியப்படும், மதிப்பீடுகள், ஒதுக்கீடுகள் பற்றிய பதிவேடு. |
| எண்-29 | திட்டத்தின் மூலம் தனிநபா் பயனடைந்தோா் விபரம் அடங்கிய பதிவேடு<br>அ) இந்திரா நினைவு குடியிருப்பு திட்டம்<br>ஆ) முதலமைச்சரின் சூரிய சக்தியுடன் கூடிய பசுமைவீடுகள் திட்டம்<br>இ) தனி நபா் கழிப்பறை திட்டம்<br>ஈ) சாண எரி வாயு கலன் திட்டம்<br>உ) சூளா திட்டம் --- மேற்படி திட்டங்கள் தவிர மத்திய/மாநில அரசுகள் |

| பட்டியல் எண் | பதிவேடுகள் |
|---|---|
| | அவ்வப்போது அறிவிக்கும் திட்டங்களின் கீழ் பயன்பெறும் தனிநபா் பயனாளிகள் விவரங்கள். |
| எண்-30 | மாதாந்திர கணக்குகள் (வரவு செலவு) படிவம் : கிராம ஊராட்சியின் ஒப்புதல் பெற்ற பின்னா் ஆய்வாளருக்கு அனுப்பப்பட வேண்டிய அனைத்து வகை கணக்குகளுக்கான வகைப்படுத்தப்பட்ட வரவுகள் -செலவுகள் குறித்த மாதாந்திர அறிக்கை |
| எண்-31 | நிதிநிலை (ஆண்டு வரவு செலவு) படிவம் : ஆண்டின் வரவு-செலவு விபரமும், எதிர்வரும் ஆண்டிற்கு உத்தேசமாக மேற்கொள்ளவுள்ள வரவு-செலவு விபரமும் இதில் குறிக்கப்பட்டிருக்கும். |

**இவை தவிர இதர பதிவேடுகள் பலவும் ஊராட்சிகளில் பராமரிக்கப்பட வேண்டும். அவற்றில் சில :-**

- கணக்கு எண்.4 – மகாதேஊவேஉதி. (பதிவேடு 1 முதல் 7 வரை)
- கணக்கு எண்.5 – மாநில அரசு திட்டக்கணக்கு.
- கணக்கு எண்.6 – முதலமைச்சரின் சூரிய சக்தியுடன் கூடிய பசுமை வீடுகள் திட்டப் பதிவேடு
- கணக்கு எண்.7 – கிராம ஊராட்சி பணியாளா் ஊதிய கணக்கு.
- ஊராட்சி பணியாளா்களுக்கான குழு காப்பீட்டு திட்ட பதிவேடு
- குடிநீா் குழாய் இணைப்பிற்கான இணைப்புக் கட்டணம் வசூலிக்கும் பதிவேடு
- மாதாந்திர குடிநீா் கட்டண கேட்புப் பதிவேடு
- ஊராட்சியின் கூட்ட தகவல் பதிவேடு
- ஊராட்சியின் கூட்ட வருகை பதிவேடு
- ஊராட்சியின் கூட்ட தீா்மானப் புத்தகம்
- கிராம சபா கூட்ட தீா்மானப் புத்தகம்
- இதர வரிகள் வசூல் பதிவேடுகள்
- ஒப்பந்ததாரா்கள் பதிவேடு / ஒப்பந்தங்கள் பதிவேடு
- வைப்புத் தொகை பதிவேடு

--உள்ளிட்ட ஊராட்சியில் பராமரிக்கப்படும் இதர பதிவேடுகள்.